16. 2000–2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

17. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நாற்பத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

18. 2001–2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. குன்னூரில் உள்ள “டீசெர்வ்” (Teaserve) என்ற புதிய ஏல மையத்தில் மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) கீழ் செலுத்தத்தக்க வரியினை, C–படிவம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இரண்டு சதவீதமாகக் குறைக்க ஆணையிட்டது குறித்து வணிகவரித் துறையின் 29.5.2003 ஆம் நாளிட்ட 48 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டம் தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2004)

3. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

4. 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4–ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

5. சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட (2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2002) மற்றும் ஆளுநர் அவர்களின் செய்தியும்.